1990 ஏப்ரல் 24]

முன்வந்து காண்டியப்பனூர் கிராமம் சர்வே எண். 54 மற்றும் 57 இந்த இரண்டு 'சர்வே' எண்ணுள்ள 2½ ஏக்கர் நிலத்தை இப்போது விலை மதிப்பீடு சான்றிதழ் அனுப்ப மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது. இந்தச் சான்றிதழ்கள் எல்லாம் வந்தவுடன் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டிப்போ கட்டும் வேலை முடிவதற்குள்ளாக திருப்பத்தூரிலும், தர்மபுரியிலும், இருக்கக் கூடிய நகரப் பேருந்துகளை பயன்படுத்தி பிற்பட்ட மக்களின் நலனைக் கருதி சில விதிமுறைகள் இருப்பினும் திருத்தம் அளித்து, அந்தப் பகுதி கிராமங்களுக்கு நகரப் பேருந்து விட அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தற்போது 5 இடங்களுக்கு ஊத்தங்கரையிலிருந்து நகரப் பேருந்துகள் செலுத்தப்படுகின்றன. அந்தப் பேருந்துகள் எல்லாம் திருப்பத்தூர் கிளை பணிமனையிலேதான் இரவில் தங்கலுக்காக கொண்டு செல்லப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று ஊத்தங்கரையிலிருந்து மேலும் 3 இடங்களுக்குக் கூடுதல் நகரப் பேருந்துகள் விடுவதற்கு நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.

சேலத்தில் விமான நிலையம் அமைத்தல்

*526—திரு. பொன். விஜயராகவன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் விமான நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலத்தில் விமான நிலையம் அமைக்க மாநில அரசு சுமார் ரூ. 70.15 இலட்சம் செலவில் 130 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி தேசிய விமான நிலையக் குழுமத்திற்கு இலவசமாக ஒப்படைத்துள்ளது. மேலும் நிலத்தினை சமன் செய்யும்

பணிக்காக ரூ. 60.00 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. இணைப்புச் சாலை, குடிநீர், மின் இணைப்பு ஆகிய பணிகளுக்காக மாநில அரசு ரூ. 15.37 இலட்சம் வழங்கியுள்ளது. நிலத்தினை சமன் செய்யும் பணி முடிவடைந்தவுடன் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும் என தேசிய விமான நிலையக் குழுமம் தெரிவித்துள்ளது.

திரு. கே. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் விமான தளம் அமைப்பதற்கு கையகப்படுத்துவதற்கு ரூ.60 லட்சம் என்று அமைச்சர் கூறியிருக்கிறார். என்னுடைய டேபிளில் வைத்திருக்கக் கூடிய அறிக்கையில் ரூ.50 லட்சம்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தற்போது அங்கே எல்லா ரக விமானங்களும் இறங்குவதற்கு வசதியான அளவிற்கு இடம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறதா அல்லது குறிப்பிட்ட ரக விமானங்கள் மட்டும்தான் அங்கே இறங்கும் என்ற அளவிற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறதா? எல்லா ரகமான விமானங்களும் இறங்குவதற்கு போதிய நிலம் இப்பொழுதே ஆர்ஜிதம் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, சேலம் விமான தளத்திற்கு 130 ஏக்கர் நிலம் ரூ. 70.15 லட்சம் செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதனை சமன் செய்யும் பணிக்காகத்தான் ரூ. 60 லட்சம் செலவிடப்பட்டுள்ளதாக என்னுடைய அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ளேன். கையகப்படுத்துவதற்கு ரூ. 70.15 லட்சம். அந்த அளவிலே தான் இப்போது கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு அதற்குத் தேவையான குடிநீர், பாதை அமைப்பு மின் இணைப்பு ஆகிய பணிகளுக்காக நம் அரசின் சார்பில் ரூ. 15,37,000 வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் எல்லாம் இப்போது விரைவாக நடைபெற்று வருகின்றன. தேசிய விமான குழுமம் கட்டிமுடிக்கப்பட வேண்டிய கட்டுமானப் பணிகளை விரைவில் தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். எத்தகைய விமானங்கள் அங்கே இறங்குவதற்கான விமான தளம் என்கின்ற விவரக் குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கோ. பூவராகன்: தலைவர் அவர்களே, சேலம் நகரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அங்கே ஒரு விமான தளம் அமைப்பதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுத்து வருகிறது,

நீண்ட நாட்களாக. மத்திய அரசாங்கத்திலே விரைவுபடுத்தும் திட்டத்தின் கீழே இந்த ஆண்டில் அவர்கள் அதிக நிதியை ஒதுக்கி விரைவிலே அந்த தளம் அமைக்கப்பட்டு அந்த விமானங்கள் வந்து இறங்கிச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசின் சார்பில் நிலம் கையகப்படுத்துவது, பாதைகள் அமைப்பது, குடி தண்ணீர் வசதி, மின்சார வசதி அத்தனை ஏற்பாடுகளையும் நாம் செய்துகொண்டிருக்கிறோம். இந்தப் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசின் நோக்கம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துப்படி விரைவில் இப்பணியை முடிக்க வேண்டுமென்று ஏர்போர்ட் அத்தாரிட்டியை நம்முடைய மாநில அரசு வலியுறுத்தும்.

கடையத்தை மையமாக வைத்துப் பேருந்துகள் இயக்குதல்.

* 7127—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையத்தை மையமாக வைத்து பேருந்துகளை இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. கே. ரவி அருணன்: தலைவர் அவர்களே, கடையம் என்பது ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடமாகும். ஆகவே, கடையத்தை மையமாக வைத்து நகரப் பேருந்துகள் இயக்காமல் இருப்பதால் அதைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களுக்கு நேரடியாக பேருந்து வசதி செய்ய முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே இந்த அரசு இந்த முடிவை மறு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,